இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

சிறப்பு அனுமதி மனு (உரிமையியல்) எண்கள் 3063-3064/2021

(வழக்கு குறிப்பேடு எண் 3869/2021)

மெட்ராஸ் உயர் நீதிமன்றம்
அதன் சார்பாக தலைமைப் பதிவாளர் ... மனுதாரர்

-எதிர்-

எம்.சி. சுப்ரமணியம் மற்றும் பலர் ... எதிர்மனுதாரர்கள்

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. மோகன் எம். சந்தானகவுடர்:

இந்த சிறப்பு அனுமதி மனுக்கள், 8.1.2020-ஆம் தேதியிடப்பட்ட மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் (இதில் இதற்குப்பிறகு "உயர் நீதிமன்றம்" எனக் குறிப்பிடப்படும்) பொது உத்தரவு மற்றும் தீர்ப்புரையிலிருந்து எழுகின்றன. இதிலுள்ள 1-ஆம் எதிர்மனுதாரர், உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேல்முறையீடு வழக்கு எண்கள் 876/2012 மற்றும் 566/2013-இல் அவரால் வைப்பீடு செய்யப்பட்ட நீதிமன்றக் கட்டணங்களைத் திருப்பியளிக்கும்படி வேண்டுரைத்தார், அவர் தாக்கல் செய்த உரிமையியல் பல்வகை மனு எண்கள் 26742 மற்றும் 26743/2019-ஐ உயர் நீதிமன்றம் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மூலம் அனுமதித்தது.

2. இம்மனுக்களுக்கு வழிகோலிய சங்கதிகள் பின்வருமாறு: 1-ஆம் எதிர்மனுதாரர், 2-ஆம் எதிர்மனுதாராரிடமிருந்து 10.6.1996-ஆம் தேதியன்று இரண்டு வாகனங்களை இரு வெவ்வேறு தவணைமுறை உடன்படிக்கைகளின்

(இதில் இதற்குப்பின் 'உடன்படிக்கை I' மற்றும் 'உடன்படிக்கை II'; கூட்டாக 'உடன்படிக்கைகள்' எனக் குறிப்பிடப்படும்) மூலம் வாங்கினார், அதன்படி 1-ஆம் எதிர்மனுதாரர், முதன்மைக் கடனாளி/தவணைச் செலுத்துபவர் ஆவார் மற்றும் 3 மற்றும் 4-ஆம் எதிர்மனுதாரர்கள் உடன்படிக்கைகளின் பிணையாளர்களாவர். உடன்படிக்கையின் வாசகங்களின்படி, 1-ஆம் எதிர்மனுதாரர், இரண்டு வாகனங்களில் ஒவ்வொன்றிற்கும் வரையறுக்கப்பட்ட தவணைகளில் தொகை ரூ.10,08,000/-ஐ 2-ஆம் எதிர்மனுதாரருக்கு செலுத்தவேண்டும்.

3. 2-ஆம் எதிர்மனுதாரர், 1, 3 மற்றும் 4-ஆம் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக முதலேற்பு வழக்கு எண்கள் 66/2003 மற்றும் 76/2003 ஆகியவற்றை முறையே கோயம்புத்தூர், கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் (இதில் இதற்குப்பின், 'உரிமையியல் நீதிமன்றம்') மற்றும் கோயம்புத்தூர், கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தின் (இதில் இதற்குப்பின் 'மாவட்ட நீதிமன்றம்') முன்பாக தாக்கல் செய்தார் என்பதை நமக்காக குறிப்பிடுவதற்குப் போதுமானதாகும். இரு உரிமை வழக்குகளிலும், 2-ஆம் எதிர்மனுதாரர், உடன்படிக்கை I மற்றும் உடன்படிக்கை II-இல் வரையறுக்கப்பட்ட தவணைகள் முறையே ரூ.6,64,000/- மற்றும் ரூ.5,97,200/-ஐ செலுத்தவில்லை என்று சாட்டுரைத்து, மீதமுள்ள தொகையை வட்டியுடன் சேர்த்து வசூலிப்பதற்கு கோரினார். இரு முதலேற்பு வழக்குகளான 66/2003 மற்றும் 76/2003, உரிமையியல் நீதிமன்றம் மற்றும் மாவட்ட நீதிமன்றத்தால் முறையே 13.2.2004 மற்றும் 31.1.2005-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரைகளின் மூலம் பகுதியாக தீர்ப்பாணையிடப்பட்டன.

4. அதில் மனக்குறையுற்று 1-ஆம் எதிர்மனுதாரர், மு.வ. எண் 66/2003 மற்றும் மு.வ. எண் 76/2003-இன் தீர்ப்புரைகளுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தின் முன்பு

முறையே மேல்முறையீடு வழக்கு எண்கள் 876/2012 மற்றும் 566/2013-ஐ முன்கொணர்ந்தார். மேல்முறையீடுகள், உயர் நீதிமன்றத்தின் முன்பு பரிசீலனைக்காக நிலுவையிலுள்ளபோதே, தரப்பினர்கள் நீதிமன்றத்திற்கு வெளியே தனிப்பட்டமுறையிலான தீர்வுக்கு ஒத்திசைந்து, அதன்படி அவர்களுக்கிடையேயான கருத்துவேறுபாடுகளைத் தீர்த்துக்கொண்டனர். இதைக் கருத்திற்கொண்டு, 1-ஆம் எதிர்மனுதாரர், மேல்முறையீடு வழக்கு எண்கள் 876/2012 மற்றும் 566/2013-ஐ திரும்பப் பெறுவதற்கான அனுமதிகோரி, உயர் நீதிமன்றத்தின் முன்பாக கோரிக்கை மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். மே.வ. எண் 566/2013 மற்றும் மே.வ. எண் 876/2012-இல் முறையே 16.9.2019 மற்றும் 18.9.2019-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவுகளின் மூலம் 1-ஆம் எதிர்மனுதாரரால் வைப்பீடு செய்யப்பட்ட நீதிமன்றக் கட்டணத்தை திருப்பியளிக்கும் உத்தரவுடன் அத்தகைய அனுமதி வழங்கப்பட்டது.

5. உயர் நீதிமன்றத்தின் மேலே சொல்லப்பட்ட உத்தரவுகள் இருப்பினும், நீதிமன்றக் கட்டணத்தை திருப்பிக்கொடுத்தலுக்கு தொடர்புடைய விதிகளின்படி அதிகாரமளிக்கப்படவில்லை என்ற காரணத்தின் அடிப்படையில், அத்தகைய திருப்பிக்கொடுத்தலுக்கான 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளரின் கோரிக்கையை பதிவாளர் அலுவலகம் வாய்மொழியாக மறுத்துவிட்டது. அதன் உதவியில்லாமலேயே, 16.9.2019 மற்றும் 18.9.2019-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவுகளுக்கிணங்க, 1-ஆம் எதிர்மனுதாரர், மே.வ. எண் 876/2012 மற்றும் 566/2013-இல் முறையே, அவரால் செலுத்தப்பட்ட நீதிமன்றக் கட்டணத்தைத் திருப்பியளிப்பதற்கு வேண்டுரைத்து, உரிமையியல் விசாரணைமுறைச் சட்டம், 1908, (இதில் இதற்குப்பிறகு 'உ.வி.மு.ச.') பிரிவு 151-இன் கீழ் 25.12.2019 அன்று உரிமையியல் பல்வகை மனு எண்கள் 26742/2019 மற்றும் 26743/2019-ஐ தாக்கல் செய்தார்.

6. 8.1.2020-ஆம் தேதியிடப்பட்ட எதிர்ப்புக்குள்ளான பொது தீர்ப்புரை மற்றும் உத்தரவின் மூலம், உயர் நீதிமன்றம் மேற்குறிப்பிட்ட உரிமையியல் பல்வகை மனுக்களை அனுமதித்து, அதிலுள்ள 1-ஆம் எதிர்மனுதாரருக்கு நீதிமன்றக் கட்டணத்தை முழுமையாக திருப்பிக்கொடுக்க பதிவாளர் அலுவலகத்திற்கு உத்தரவிட்டது.

7. தொடர்புடைய விதிகளின் கீழ் நீதிமன்றக் கட்டணத்தை திருப்பிக்கொடுத்தல் அனுமதிக்கத்தக்கதா? என்பதான வினாவைக் குறித்து விவாதிக்கையில், உயர் நீதிமன்றம் 1955-ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்கு மதிப்பீடு சட்டம் (இதில் இதற்குப்பின், '1955, சட்டம்') பிரிவு 69-அ-ஐ பரிசீலித்தது, அது பின்வருமாறு எடுத்தியம்பப்படுகிறது:

> "69-அ. **உரிமையியல் விசாரணைமுறைச் சட்டத்தின் பிரிவு 89-இன் கீழான பூசல்களைத் தீர்வுசெய்வதன்போில் திருப்பிக் கொடுத்தல்.**- நீதிமன்றம் 1908-ஆம் ஆண்டு உரிமையியல் விசாரணைமுறைச் சட்டத்தின் (மையச் சட்டம் V/1908) 89-ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பூசலைத் தீர்த்துக் கொள்ளும் முறைகள் எவற்றையும் உரிமை வழக்கின் தரப்பினர்களுக்கு பரிந்துரைக்கிறவிடத்து, செலுத்தப்பட்ட கட்டணம் அத்தகைய பரிந்துரையின்போில் திருப்பிக்கொடுக்கப் படுதல்வேண்டும். அதனைத் திருப்பிக்கொடுப்பதற்கு, பூசலைத் தீர்த்துக்கொள்ளும்வரையில் காத்திருக்கவேண்டியதில்லை."
>
> (வலியுறுத்திக் கூறப்பட்டது)

முதலேற்பு உரிமை வழக்குகளின் தொடர்ச்சியாக உள்ள மேல்முறையீட்டு வழக்குகளைப் பரிசீலிக்கையில், பிரிவு 69-அ-இல் வகைசெய்யப்பட்டவாறு 'உரிமை வழக்குகள்' என்ற வரம்புக்குள் வருவதால், நீதிமன்றம், உ.வி.மு.ச., பிரிவு 89-இல் கவனம் செலுத்தமுற்பட்டது, அது பின்வருமாறு எடுத்தியம்பப்பட்டுள்ளது.

"89. **நீதிமன்றத்திற்கு வெளியே பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளுதல்.-** (1) தரப்பினர்களுக்கு, ஏற்கத்தக்கதாக இருக்கக்கூடிய தீர்வுக்குரிய கூறுகள் இருப்பதாக நீதிமன்றத்திற்கு தெரியுமிடத்து, நீதிமன்றமானது தீர்வுக்குரிய வரையறைகளை வகுத்து, அதனைத் தரப்பினர்களின் கருத்துரைக்காக அவர்களிடம் அளிக்கவேண்டும், தரப்பினர்களின் கருத்துரைகளைப் பெற்றபின்னர், நீதிமன்றம் ஒரு சாத்தியமான தீர்வுக்குரிய வரையறைகளை மீண்டும் வகுத்து, அதை:-

(அ) பொதுவர் தீர்வு

(ஆ) இசைவிணக்கத் தீர்வு

(இ) லோக் அதாலத் (மக்கள் நீதிமன்றம்) மூலம் தீர்வு செய்தல் உட்பட நீதிமுறைத் தீர்வு; அல்லது

(ஈ) சமரசம்

ஆகியவற்றுக்கு குறித்தனுப்பலாம்.

2. ஒரு பிரச்சினையானது -

(அ) பொதுவர் தீர்வு அல்லது இசைவிணக்கத் தீர்வுக்காக குறித்தனுப்பப்படுமாயின், 1996 (26/1996)-ஆம் ஆண்டு, பொதுவர் தீர்வு மற்றும் இசைவிணக்கத் தீர்வுச் சட்டத்தின் வகையங்களின் கீழ் பொதுவர் தீர்வுக்கோ, இசைவிணக்கத் தீர்வுக்கோ குறித்தனுப்பப்படும் தீர்வுக்கான வழக்கு நடவடிக்கைகளுக்கு அச்சட்டத்தின் வகையங்கள் பொருந்தத்தக்கதாக இருத்தல்வேண்டும்;

(ஆ) மக்கள் நீதிமன்றத்திற்கு (லோக் அதாலத்திற்கு) குறித்தனுப்பப்படும்போது, நீதிமன்றம் அதனை, 1987 (39/1987)-ஆம் ஆண்டு சட்டப்பணிகள் ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு 20-இன் உட்பிரிவு (1)-இன் வகையங்களுக்குட்பட்டு, மக்கள் நீதிமன்றத்திற்கு குறித்தனுப்பலாம், மேலும், மக்கள் நீதிமன்றத்திற்கு அவ்வாறு குறித்தனுப்பப்பட்ட பிரச்சினை தொடர்பாக அச்சட்டத்தின் மற்ற அனைத்து வகையங்களும் பொருந்தத்தக்கதாக இருத்தல்வேண்டும்;

(இ) நீதிமுறை தீர்வுக்காக குறித்தனுப்பப்படும்போது, அதை நீதிமன்றம் உரிய அமைப்புக்கோ அல்லது நபருக்கோ குறித்தனுப்பலாம், அந்த அமைப்பு அல்லது நபர் மக்கள் நீதிமன்றமாகவே கருதப்படுதல்வேண்டும். 1987 (39/1987), சட்டப் பணிகள் ஆணைக்குழு சட்டத்தின் வகையங்கள்

அனைத்தும், அச்சட்ட வகையங்களின் கீழ் மக்கள் நீதிமன்றத்திற்கு குறித்தனுப்பப்படும் பிரச்சினையைப் போன்று பொருந்தத்தக்கதாக இருத்தல்வேண்டும்;

(ஈ) சமரசத்திற்காக குறித்தனுப்பப்படும்போது, நீதிமன்றம், தரப்பினர்களுக்கிடையே ஒத்திசைவை ஏற்படுத்தி வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நடைமுறையைப் பின்பற்றுதல்வேண்டும்."

8. மேற்படி வகையங்களை உரிய பரிசீலனை செய்தபிறகு, அவை அவற்றுக்கு நலம் பயக்கும் செயல்நோக்கத்தையளித்து, அவற்றின் குறிக்கோளையும், நோக்கத்தையும் நிறைவேற்றும்வகையில், தாராளப்போக்குடன் பொருள்விளக்கப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்மானித்தது. குறுகிய நோக்கத்துடன் பொருள்கொள்ளப்படுமானால், அது, உ.வி.மு.ச., பிரிவு 89-இன் கீழ் சமரச மையம் அல்லது பிற மாற்று நீதிமுறைத் தீர்வு மையங்களின் மூலம் அவர்களது பிரச்சினையைத் தீர்வுசெய்துகொள்ளும் தரப்பினர்கள், அவர்களது நீதிமன்றக் கட்டணத்தைத் திரும்பப்பெறுவதற்குரியவர்களாகும். அதேவேளையில் தாங்களாகவே தனிப்பட்டமுறையில் தங்களது பிரச்சினைகளைத் தீர்வு செய்துகொள்ளும் தரப்பினர்கள் கட்டணத்தைத் திரும்பப்பெறக் கோருவதற்கு வழிவகை ஏதுமின்றி விடப்படும் சூழ்நிலைக்கும் வழிகோலிவிடும். அதன்படி, ஒரே சூழ்நிலையிலுள்ள இருவருக்கிடையேயான அத்தகைய மாறுபட்ட நடத்துமுறை, அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 14-ஐ மீறுவதாக அமைந்துவிடும் என்று உயர் நீதிமன்றம் கருத்துரைத்தது. ஆகவே, உயர் நீதிமன்றத்தின் கருத்துப்படி, உ.வி.மு.ச.,

பிரிவு 89-இன் அரசமைப்புசார்ந்த பொருள்விளக்கமும், அதன் விளைவாக, 1955-ஆம் ஆண்டு சட்டப்பிரிவு 69-அ-வும், இவ்வகையங்கள் தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சினையை நீதிமன்றத்திற்கு வெளியே தீர்த்துக்கொள்வதற்குரிய அனைத்து முறைகளையும் உள்ளடக்குவதோடு, நீதிமன்றம் பின்னிட்டு, அவை சட்டப்படியாக தீர்வு காணப்பட்டுள்ளதை அறியச் செய்கின்றன.

9. இங்குள்ள மனுதாரர் மனக்குறையுற்றதன்பேரில், உயர் நீதிமன்றத்தின் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையை எதிர்த்தார்.

10. உ.வி.மு.ச., பிரிவு 89-இல் பட்டியலிடப்பட்டுள்ள ஏதேனும் மாற்றுமுறை பிரச்சினையைத் தீர்வுசெய்யும் அமைப்புக்கு, நீதிமன்றமே தரப்பினர்களை குறித்தனுப்புகின்ற அவ்வழக்குகளில் மட்டுமே 1955-ஆம் ஆண்டு சட்டப்பிரிவு 69-அ-ஆனது நீதிமன்றக் கட்டணத்தைத் திருப்பியளிக்கவே கருத்துரைக்கிறது என்பது மனுதாரரின் வாதங்களிலுள்ள முறையீட்டின் சாரமாகும். எனவே, தரப்பினர்கள், நீதிமன்றத்தாலான குறித்தனுப்புதல் ஏதுமின்றி, உ.வி.மு.ச., பிரிவு 89-இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முறைகளுக்கப்பால், அவர்களது பிரச்சினையை தனிப்பட்ட முறையில் தீர்வு செய்துகொள்ள உடன்படுமிடத்து, இது தற்போதைய வழக்கைப் போன்ற சூழ்நிலைகளுக்கு பொருந்தாது.

<u>இந்நீதிமன்றத்தின் பகுப்பாய்வு</u>

11. மனுதாரரின் வாதத்தைக் கேட்டதன்பேரிலும், முன்வைக்கப்பட்ட வாதக்கூறுகளை முழுமையாக பரிசீலனை செய்ததிலும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காக மனுதாரரின் வாதுரைகளால் ஈர்க்கப்படவில்லை என்பதையும் நாங்கள் அறிகிறோம்.

12. உ.வி.மு.ச., பிரிவு *89*-இன் வகையங்கள், உரிமையியல் நீதிமன்றங்களில் நெடுங்காலமாக பெருகிவரும் வழக்குகளின் பின்புலத்திலிருந்து புரிந்துகொள்ளப்படுதல் வேண்டும், இது திடீர் இடருக்குள்ளாகி விரைவான நீதிக்கு நிர்ப்பந்தித்து, நீதிமுறை அமைப்பின்மீது அளவுக்கு மீறிய சுமையை வைக்கிறது. *1908*-ஆம் ஆண்டு உரிமையியல் விசாரணைமுறைச் சட்டத்தின் பிரிவு *89*-இன் திருத்தச்சட்டம் மற்றும் தொடர்புடைய வகைமுறைகளின் அடிப்படையில், சட்ட ஆணையத்தின் *238*-ஆவது அறிக்கையில், பிரிவு *89*-ஆனது, உரிமையியல் பிரச்சினைகளுக்கு மாற்றுமுறைகளில் தீர்வுகாணும் முறைகளை நாடிச்சென்று, அவர்களுடைய பிரச்சினைகளை நீதிமன்றத்திற்கு வெளியே தீர்த்துக்கொள்ள ஊக்குவிப்பதை *(பத்தி 2.3)* உரிமையியல் நீதிமன்றங்களின் கடமையாக்கியுள்ளது. இக்கருத்துரைகள், தனிப்பட்ட தீர்வுமுறைகளை எளிதாக்குவதற்கும், இந்திய நீதித்துறையில் நிரம்பிவழியும் வழக்குப் பதிவுகளை எளிதாக்குவதற்கும், பிரிவு *89*-இன் நோக்கத்தையும், குறிக்கோளினையும் தெள்ளத்தெளிவாக்குகிறது. இந்த நோக்கம் புனிதத்தன்மையுடையதாகவும், *1955*-ஆம் ஆண்டு சட்டப்பிரிவு *69*-அ இந்திய நீதிமன்றங்களில் உரிய காலத்தில் நீதி வழங்குதலை செயற்படுத்துவதற்கான கட்டாயத்தைத் தெரிவிப்பதோடு, நீதிமன்றக் கட்டணத்தை திருப்பியளிப்பதை வகைசெய்வதன் மூலம் தீர்வுகாணப்படுவதையும் ஊக்குவிக்கிறது. இவ்விரு வகையங்களின் அளப்பிற்கரிய நன்மை பயக்கக்கூடிய நோக்கமும், குறிக்கோளும் அதுகுறித்த இந்நீதிமன்றத்தின் பொருள்விளக்கத்தை தெரிவிக்கவேண்டும்.

13. மேற்படி வகைமுறைகள் குறித்த எங்களது பொருள்விளக்கத்தை மேலும் விளக்குவதற்கு முன்பாக, டைரக்டரேட் ஆ.ப் என்போர்ஸ்மென்ட் -எதிர்- தீபக் மகாஜன், *1994 (3)* எஸ்.சி.சி. *440*-இல் இந்நீதிமன்றத்தின் பொருள்விளக்கும் பங்கு குறித்த

பின்வரும் இன்றியமையாக் கூறினைக் கவனத்திற்கொள்ளவேண்டும் -

"24. ....நீதிமன்றங்களின் கடமை என்பது சட்டமியற்றுவதல்ல. அதனை விளக்குவது மட்டுமே என்றபோதிலும், சட்டமன்றத்தின் உட்கருத்தையும், சட்டத்தின் உட்பொருளையும் செயற்படுத்துவதிலுள்ள சிரமங்களைக் களைவதற்கான பொறுப்பை ஏற்க சட்டமன்றத்தைக் கோரமுடியாது. அத்தகைய சூழ்நிலைகளில், சட்டத்தைத் தாராளப்போக்குடன் பொருள் விளக்குவதன் மூலம் சட்டத்தை உருவாக்குவதோ, புதுமையாகப் பொருள்விளக்குவதோ நீதிமன்றத்தின் கடமையாகும்.

25. மேக்ஸ்வெல்லின் சட்டத்தின் பொருள்விளக்கத்தின் பத்தாவது பதிப்பின் பக்கம் 229-இல் கீழ்க்காணும் பகுதி காணப்படுகிறது:

"ஒரு சட்டத்தின் மொழிநடையானது, அதனுடைய சாதாரணமான பொருள்வகையிலும், இலக்கணரீதியான பொருள்வகையிலும், சட்டமியற்றுவதன் தெளிவான நோக்கத்திற்கு வெளிப்படையான முரண்பாட்டுக்கோ அல்லது சில அசௌகரியத்திற்கோ அல்லது அறிவுக்கு ஒவ்வாததாகவோ, இடர்ப்பாட்டிற்கோ அல்லது அநீதிக்கோ உட்கருத்தில்லை என அனுமானித்தாலும், அதன்மீது ஒரு பொருள்விளக்கத்தை வைக்கலாம். இது சொற்களின் பொருளோடு வாக்கியத்தின் அமைப்பையும் மாற்றியமைத்துவிடுகிறது. ....சட்டத்தின் முதன்மை நோக்கமும்,

உட்கருத்தும் தெளிவாக இருக்குமிடத்து, தேவை ஏற்பட்டாலன்றி அல்லது பயன்படுத்தப்பட்ட மொழி முற்றிலும் எளிதாக கையாளப்படமுடியாததாக இருந்தாலன்றி, முன்வரைவு செய்தவரின் திறமையின்மையாலோ அல்லது சட்டத்தைக் குறித்த அறியாமையாலோ அதனை பயனற்றதாக ஆக்கிவிடக்கூடாது." *(வலியுறுத்திக் கூறப்பட்டது)*

எனவே, நீதிமன்றங்கள், சட்டத்தின் மொழிநடையிலுள்ள புறக்கணிக்கக்கூடிய இருபொருள்படும் தன்மையிலிருந்து விளைகின்ற அநீதி அல்லது ஏதேனும் இடர்ப்பாட்டைக் களைவதற்காக, சட்டமியற்றியதன் உண்மையான நோக்கத்தை அடைவதற்காக அதை பொருள்விளக்கம் செய்யலாம் என்பது நன்கு அறுதியிடப்பட்டுள்ளது. இது, அதில் பயன்படுத்தப்பட்டுள்ள மொழிநடையில் விதிமுறையின்றி தொகுத்துரைக்கப்பட்ட சூழ்நிலைகளை உள்ளடக்குகின்ற தொடர்புடைய வகையங்களின் வரம்பெல்லையை விரிவுப்படுத்துவதையும் உள்ளடக்கலாம்.

14. இச்சட்டப் பொருள்விளக்கக் கோட்பாடு, **ஷைலேஷ் தைரியவான் -எதிர்- மோகன் பால்கிருஷ்ண லல்லா,** *(2016) 3* எஸ்.சி.சி. *619* என்ற மிக சமீபத்திய தீர்முடிவில் உறுதிசெய்யப்பட்டுள்ளது -

*"33. ...*சொல்லுக்கு சொல் நிகரான பொருள்விளக்க விதியானது, சில காலத்திற்கு முன்புவரை, "பொன் விதி"யாக கருதப்பட்டிருந்தாலுங்கூட, குறிப்பாக சொல்லுக்குச் சொல் நிகரான பொருள்விளக்கமானது நோக்கத்தை நிறைவு செய்யாமலிருக்குமிடத்து அல்லது பொருளற்றதாகிவிடுமிடத்தான நேர்வுகளில், தற்போது செயல்நோக்குடைய பொருள்விளக்கக்

கோட்பாடே தலைசிறந்து விளங்குகிறது. இது சட்டத்தின் நோக்கத்துடன் முரண்படும் முடிவைக் கொண்டுவருமானால், அதற்கு ஆதரவுத் தெரிவிக்கமுடியாது."

(வலியுறுத்திக் கூறப்பட்டது)

அனுராக் மிட்டல் -எதிர்- ஷைலி மிஷ்ரா மிட்டல், *(2018) 9* எஸ்.சி.சி. *691*-இல் இந்நீதிமன்றத்தின் பிந்திய தீர்முடிவில் இது பின்பற்றப்பட்டுள்ளது.

15. அறுதியிடப்பட்ட சட்டப் பொருள்விளக்கக் கோட்பாடுகளின் துணைகொண்டு பார்க்கையில், தற்போதைய விவாதப்பொருளாகவுள்ள குறிப்பிட்ட வகையங்களில் நாங்கள் தற்போது கவனஞ்செலுத்த விழைகிறோம். மனுதாரரால் பொருள்விளக்கப்பட கோரப்பட்டுள்ள உ.வி.மு.ச., சட்டத்தின் பிரிவு *89* மற்றும் *1955*-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு *69*-அ-இன் குறுகிய நோக்கமுடைய பொருள்விளக்கமானது, நீதிமன்றத்தால் சமரச மையத்திற்கோ அல்லது மற்ற மையங்களுக்கோ குறித்தனுப்பப்படும் தரப்பினர்கள், அவர்களது நீதிமன்றக் கட்டணத்தை முழுமையாக திரும்பப்பெற உரிமையுடையவர்கள் என்ற அதேவேளையில், இதேபோன்று தங்களது பிரச்சினையை தாங்களாகவே தனிப்பட்ட முறையில் தீர்த்துக்கொண்டு நீதிமன்றத்தின் நேரத்தையும், நிதியாதாரங்களையும் மிச்சப்படுத்தும் தரப்பினர்கள், தீர்வு கோருவதற்கு நீதிமன்றத்தின் தலையீட்டை கோரத்தேவையில்லை என்பதற்காகவே அவர்களுக்கு அதேபயன் மறுக்கப்பட்டுவிடும் என்னுமொரு முடிவுக்கு வழிகோலிவிடும். எங்களது கருத்துப்படி, அத்தகையதொரு பொருள்விளக்கமானது, மேற்படி வகையங்களின் குறிக்கோளையும், நோக்கத்தையும், வாய்ப்புள்ள இரு பிரிவைச் சார்ந்த தரப்பினர்களில் ஒரு பிரிவினர் *1955*-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு *69*-அ-இன் பயன் மறுக்கப்பட்டு பாரபட்சமாக நடத்தப்படுகின்றனர் என்றதொரு பொருளற்றதும், நியாயமற்றதுமான

முடிவுக்கு தெளிவாகவே வழிகோலிவிடும். இதன் பின்புலத்தில் சொல்லுக்கு சொல் நிகரான அல்லது விதிமுறைச்சார்ந்த பொருள்விளக்கமானது, அநீதிக்கு மட்டுமே வழிகோலி, வகையங்களின் நோக்கத்தினை பயனற்றதாக்கிவிடும். ஆதலால் இதிலிருந்து விலகி, வகையங்களின் செயல்நோக்குடைய பொருள்விளக்கத்திற்கு ஆதரவாக செயல்படவேண்டியதாகிறது.

16. எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையில் உயர் நீதிமன்றத்தால் எடுக்கப்பட்ட கருத்துரையானது, மற்ற மாநிலங்களிலுள்ள உயர் நீதிமன்றங்களாலுங்கூட உறுதிசெய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும். **கமலம்மா மற்றும் பலர் -எதிர்- உறானாலி தாலுக் அக்ரிகல்சரல் புரொடியூஸ் கோ-ஆப்பரேட்டிவ் மார்க்கெட்டிங் சொசைட்டி லிமிடெட்,** *(2010) 1* ஏ.ஐ.ஆர். கர்நாடகா ஆர். *279* என்ற கர்நாடக உயர் நீதிமன்றத்தின் தீர்முடிவினைக் குறித்துரைத்ததில் பின்வருமாறு முடிவு செய்யப்பட்டுள்ளது:

> "6. உரிமை வழக்கின் அல்லது மேல்முறையீட்டின் அல்லது வேறு ஏதேனும் வழக்கு நடவடிக்கைகளின் தரப்பினர்கள், உ.வி.மு.ச., பிரிவு *89*-இன் வகையங்களின் துணைகொண்டு, மக்கள் நீதிமன்றத்தில் பொதுவர் தீர்வு அல்லது சமரசம் அல்லது இசைவிணக்கத் தீர்வு மூலமாக தங்களது பிரச்சினையை இணக்கமானமுறையில் தீர்வுசெய்துகொண்டனரா? அல்லது அவர்கள், அதனை உ.வி.மு.ச., பிரிவு *89*-இன் வகையத்தை துணைகொள்ளாமல், மக்கள் நீதிமன்றத்தின் ஏதேனும் பொதுவர்/சமரசர்/இணக்கப்படுத்துநர் இவர்களில் எவரொருவரின்

தலையீடுமின்றி தங்களுக்குள்ளாகவே தீர்வுசெய்துகொண்டனரா? என்பது, அவர்கள் தங்களது பிரச்சினையை நீதிமன்றத்தின் தலையீடின்றி தீர்வுசெய்துகொண்டனர் என்ற பொருண்மையில் உள்ளது. அவர்கள் உ.வி.மு.ச., பிரிவு 89-ஐ துணைகொண்டு தங்களது பிரச்சினையைத் தீர்வுசெய்துகொண்டால், அத்தருணத்தில், மாநில அரசு சில செலவினங்களை ஏற்றுக்கொள்ளவேண்டியிருக்கலாம். ஆனால் அவர்கள், பொதுவர்/சமரசர் போன்ற எவரொருவருமின்றியோ, நீதிமன்றத்தின் தலையீடின்றியோ, தங்களது பிரச்சினைகளைத் தங்களுக்கிடையே தீர்வுசெய்துகொண்டால், மாநில அரசுக்கு எந்தவொரு செலவினமும் ஏற்படாது. அவ்வாறிருக்கையில், வழக்கிலுள்ள தரப்பினர்கள், உ.வி.மு.ச., பிரிவு 89-இன் துணைகொண்டு தங்களது பிரச்சினையைத் தீர்வுசெய்து கொண்டாலோ அல்லது உ.வி.மு.ச., பிரிவு 89-இன் துணைநாடாமல் தங்களுக்குள்ளாக அதனை தீர்வுசெய்து கொண்டாலோ, அது தொடர்பாக நீதிமன்ற கட்டணத்தைச் செலுத்தும் தரப்பினர்கள் 1870-ஆம் ஆண்டு நீதிமன்றக் கட்டணங்கள் சட்டத்தின் பிரிவு 16-இன் கீழ் வகைசெய்யப்பட்டவாறு, நீதிமன்றக் கட்டணத்தை முழுமையாக திரும்பப்பெறுவதற்கு உரிமையுடையவராவர் என்பதே எங்களது ஆழ்ந்தாராய்ந்த கருத்தாகும்.

(வலியுறுத்திக் கூறப்பட்டது)

1870-ஆம் ஆண்டு நீதிமன்றக் கட்டணங்கள் சட்டத்தின் பிரிவு *16*, *1955*-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு *69*-அ-க்கு இணையானதாகும், எனவே மேற்கூறப்பட்ட கோட்பாடுகள் தற்போதைய வழக்குக்கு சமஅளவில் பொருந்தத்தக்கவையாகும்.

*17. (*மேற்படி*)* **கமலம்மாவின்** தீர்முடிவு, **பிரதீப் சோனாவத் -எதிர்- சதீஷ் பிரகாஷ்,** *2015 (1)* ஆர்.சி.ஆர். சிவில் *955* மற்றும் **பிரீதம் சிங் -எதிர்- அசோக் குமார்,** *2019 91)* லா ஹெறரால்டு *(*பி&எச்*) 721* என்ற வழக்கில், பஞ்சாப் மற்றும் உறரியானா உயர் நீதிமன்றத்தால் பின்பற்றப்பட்டுள்ளது, அது மீண்டும் **இராஜ் குமார் -எதிர்- கைந்தா தேவி, சட்டப்படியான சார்பாற்றுநர்கள் மூலமாக மற்றும் பலர்,** *2019* எஸ்.சி.சி. ஆன்லைன் பி&எச் *658* என்ற வழக்கிலும் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

18. **ஜே.கே. .:போர்ஜிங்ஸ் -எதிர்- ஈசார் கன்ஸ்டரக்ஷன் இந்தியா லிமிடெட் மற்றும் பலர்,** *(2009) 113* டி.ஆர்.ஜே. *612* என்ற வழக்கில் தில்லி உயர் நீதிமன்றமும் இதேபோன்றதொரு கருத்தை எடுத்தது:

> *"11.* விரைவான தீர்வுக்குவேண்டி கோரப்பட்டு, அது இப்பிரிவுகளை இடைசேர்த்து திருத்தியமைத்ததன் மூலம் சிறப்பான நோக்கத்தை அடைந்துவிட்டதாகத் தெரிகிறது. சட்டத்தின் பின்புலத்திலுள்ள கொள்கையானது, ஒத்திசைவின் மூலம் வழக்குகளின் எண்ணிக்கையைக் குறைப்பதாகும். வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டதால், ஒத்திசைவினை ஊக்குவிப்பது நீதிமன்றத்தின் கடமை என்பதால், உ.வி.மு.ச., பிரிவு *89*-ம் நீதிமன்றக் கட்டணச் சட்டத்தின் பிரிவு *16*-ம் அத்திசையில் செல்வதற்கான வரவேற்கத்தக்க

படிக்கல்லாகும். நீதிமன்றங்களில் பெருமளவிலான வழக்குகள் நிலுவையிலுள்ள இச்சூழ்நிலையில், செயல்நோக்குடையதும் முற்போக்குடையதுமான பொருள்விளக்கமே இத்தருணத்தின் தேவைப்பாடாகும். சட்டமன்றத்தின் முதன்மையான உட்கருத்து, முக்கியமான வகையங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தை-களிலிருந்தும் பொருளிலிருந்தும் திரட்டப்படுதல்வேண்டும். சட்டம், அதன் எளிய இலக்கணப்பொருளிலேயே பொருள்-விளக்கப்படுதல்வேண்டும்.

12. நீதிமன்றக் கட்டணங்கள் சட்டம், பிரிவு 16-இன் சட்டப்படியான உட்கருத்தானது, வழக்கு நடவடிக்கைகளின் நிலையைப் பொருட்படுத்தாமல், ஒத்திசைவை எட்டுகின்ற தரப்பினர்களின் அனைத்து சூழ்நிலைகளிலும் கவனஞ்செலுத்துமளவுக்கு விரிவுப்படுத்தப்பட்டுள்ளது என்பது தெள்ளத்தெளிவாகிறது. தங்களது பிரச்சினையை இணக்கமானமுறையில், தீர்த்துக் கொள்ள நீதிமன்றத்தை அணுகும் தரப்பினருக்கு ஏதோவொரு வகையில் ஊக்கமளிக்கும்விதமாக நீதிமன்றக் கட்டணத்தை முழுமையாக திரும்பப்பெறுவதே இந்த வகையம் இயற்றப்பட்டதன் நோக்கமாக இருந்தது என்பதும் தெளிவு. இந்த நிலையைக் கருத்திற்கொண்டு, தற்போதைய விண்ணப்பமானது அனுமதிக்கப்படவேண்டும்.

14. உரிமை வழக்கின் தரப்பினர்கள் காலவரையறையின்றி நீண்டுகொண்டிருக்கும் விசாரணைக்குப் பின்னர், தீர்வு

பெறுவதற்காக நீதிமன்றத்தை அணுகியதான வழக்கு இதுவல்ல. இது காலவரையின்றி நீண்டுகொண்டிருக்கும் விசாரணையாக இருந்திருந்தால், நீதிமன்றக் கட்டணம் திருப்பியளிக்கப்படாததை நியாயப்படுத்தியிருக்கமுடியும், ஆனால் இவ்வாறான வழக்குகளில் தரப்பினர்களை ஊக்குவிப்பதே நீதிமன்றங்களின் பெருமுயற்சியாக இருத்தல்வேண்டும் மற்றும் அவர்களை ஊக்குவிக்கும்விதமாக வழக்குரையுடன் கூடிய நீதிமன்றக் கட்டணத்தை திருப்பியளிக்கவேண்டும்.

xxx

17. உ.வி.மு.ச., பிரிவு 89-இன் கீழ் வகுத்துரைக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு முறையில் மட்டுமே பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளுதல் என்பது உ.வி.மு.ச., பிரிவு 89-இன் கீழ் இன்றியமையாத தகுதிக்கூறு அல்ல. அது தீர்வு காணப்பெறுவதற்கான சில முறைகளை வகுத்துரைக்கிறது என்பதைக்காட்டிலும் பிரிவு 89-இன் பொருந்துகைக்கான இன்றியமையாத தகுதிக்கூறு என்பது நீதிமன்றங்களின் தலையீடின்றி நீதிமன்றத்திற்கு வெளியே தரப்பினர்-களுக்கிடையே தீர்வுசெய்துகொள்வதாகும்.

18. நீதிமன்றம் எப்பொழுதுமே பிரச்சினையைத் தீர்வுசெய்யும் மன்றத்திற்கு தரப்பினர்களை குறித்தனுப்பவேண்டும் என்பதும் பிரிவின் வேண்டுறுத்தல் அல்ல. தரப்பினர்கள் நீதிமன்றத்திற்கு

வெளியே தீர்வுகண்டிருந்தால், அது நேர்மை நெறி கோட்பாட்டின் அடிப்படையில் வரவேற்கக்கூடிய விடயமாக இருக்கவேண்டும்.

19. நீதிமன்றக் கட்டணங்கள் சட்டமானது, வரிமதிப்பீட்டுச் சட்டமாகும், அது விதிமுறைப்படியாக பொருள்கொள்ளப்பட்டு, ஐயப்பாட்டிற்கான பலன் ஏதுமிருப்பின், அது தரப்பினருக்கு ஆதரவாக அளிக்கப்படவேண்டுமேயன்றி மாநில அரசுக்கு அல்ல." (வலியுறுத்திக் கூறப்பட்டது)

(மேற்படி) **கமலம்மா** மற்றும் *(மேற்படி)* **ஜே.கே. போர்ஜிங்ஸ்** ஆகிய இரு வழக்கிலும் எடுக்கப்பட்ட கருத்து, பின்னர் **இந்தர்ஜித் கவுர் ரெய்னா -எதிர்- உறர்விந்தர் கவுர் ஆனந்த்,** *2018* எஸ்.சி.சி. ஆன்லைன் தில்லி *6557* என்ற வழக்கில் தில்லி உயர் நீதிமன்றத்தால் சார்வுறப்பட்டது.

19. நாங்கள், மேற்குறிப்பிடப்பட்ட தீர்முடிவுகளில் உயர் நீதிமன்றங்களால் எடுக்கப்பட்ட அணுகுமுறையுடன் உடன்படுகிறோம். பெரும்பாலும் இசைவிணக்கத்தின் மூலம் பிரச்சினையினைத் தீர்வுசெய்துகொள்ளும் முறைகளின் மூலம் தங்களது வழக்குகளைத் திரும்பப்பெற விரும்பும் தரப்பினர்களுக்கு வெகுமதி அளிப்பதே, பிரிவு *69*-அ-இன் நோக்கமாகும், அதன்படி அவர்களால் வைப்பீடு செய்யப்பட்ட நீதிமன்றக் கட்டணத்தைத் திருப்பித்தருமாறு கோர அவர்களை இயல்விப்பதன் மூலம் நீதிமன்றத்தின் நேரமும், நிதிவளங்களும் மிச்சமாகிறது. அவ்வாறு நீதிமன்றக் கட்டணத்தைத் திருப்பியளிப்பது தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சினைக்குரிய விடயப்பொருளுடன் தொடர்புடையதாகயில்லாவிட்டாலும், அது நிச்சயமாக பிரச்சினையைத் தீர்வுசெய்வதற்கான மாற்றுமுறைகளை நாடிச்செல்ல அவர்களை தூண்டுவதற்கு

துணைபுரியும் பொருளாதாரரீதியான ஊக்குவிப்பாகும். (மேற்படி) **கமலம்மா** என்ற வழக்கில், உ.வி.மு.ச., பிரிவு 89-இன் கீழ் நீதித்துறை தலையீட்டின் அவசியமின்றி தங்களது பிரச்சினைகளைத் தீர்வுசெய்துகொள்ள ஒப்புக்கொண்ட தரப்பினர்கள், இப்பயனைப்பெற மிகவும் தகுதியுடையவர்களே என்று கர்நாடக உயர் நீதிமன்றம் சரியாகவே கருத்துரைத்தது. அவர்கள் தங்களது கோரிக்கைகளை தாங்களாகவே தீர்மானித்துக்கொள்ள விரும்புவதாலேயே அவர்கள் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள ஒரு மூன்றாம் தரப்பினர் அமைப்புக்காக ஒரு சர்ச்சைக்குரிய தளவாடத்தை ஏற்படுத்துவதிலிருந்து அரசைக் காத்துள்ளனர். பொதுவர் தீர்வும், சமரசமும் நிச்சயமாக பிரச்சினைக்கு தீர்வுகாணுகின்ற நலம்பயக்கும் முறைகளாக இருந்தாலும், தரப்பினர்களுக்கிடையே தனிப்பட்டமுறையில் இணக்கமான பேச்சுவார்த்தை நடத்துவதன் முக்கியத்துவத்தைக் குறைத்துக் கூறக்கூடாது எனவும் நாங்கள் அறிகிறோம். எங்களது கருத்தின்படி, உ.வி.மு.ச., பிரிவு 89-இல் குறிப்பிடப்பட்டுள்ள நீதிமன்றத்திற்கு வெளியே தீர்வு காணும்முறைகளை மட்டும் ஏன் பிரிவு 69-அ ஊக்கப்படுத்தவேண்டும் என்பதற்கும், தரப்பினர்களால் பயன்படுத்தப்படும் மற்றமுறைகளை மாற்றாந்தாயின் மகனைப்போல ஏன் பாவிக்கவேண்டும் என்பதற்குமான நியாயமான காரணம் ஏதும் சொல்லப்படவில்லை.

ஒப்புக்கொண்டவாறு, தரப்பினர்கள், காலவரையறையின்றி நீண்டுகொண்டிருக்கும் விசாரணைக்கு அல்லது பல்வேறான அற்பமான வழக்குகளுக்கு பின்னர், தங்களது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொண்டுவிட்டதான பாவனையில் நீதிமன்றக் கட்டணங்களைத் திருப்பியளிக்கக்கோரி நீதிமன்றத்தை அணுகுவதற்கான சூழ்நிலைகளும் இருக்கலாம். அவ்வாறான வழக்குகளில் நீதிமன்றம், தரப்பினர்களின் முந்தைய நடத்தையையும் நேர்மைநெறி கோட்பாடுகளையும் கருத்திற்கொண்டு, நீதிமன்றக் கட்டணங்களுக்குரிய தொடர்புடைய விதிகளின்கீழ் பரிகாரம் வழங்க

மறுக்கலாம். ஆயினும், தற்போதைய வழக்கு, அத்தகைய தன்மைகொண்டதாக நாங்கள் காணவில்லை.

20. எனவே, 1955-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 69-அ மற்றும் உ.வி.மு.ச., பிரிவு 89-இன் வரையறைகளின் விதிமுறைசார்ந்த பொருள்விளக்கமானது, தரப்பினர்களுக்கிடையேயான அத்தகைய தனிப்பட்டமுறையிலான பேச்சுவார்த்தைகளையும், ஒத்திசைவுத் தீர்வுகளையும் உள்ளடக்காது என்றாலுங்கூட, அத்தகைய ஒத்திசைவுத் தீர்வுகளில் பங்கேற்பவர்கள், உ.வி.மு.ச., பிரிவு 89-இன் கீழ் பிரச்சினையை மாற்றுமுறைகளில் தீர்வுசெய்துகொள்ளும் முறைகளை நாடிச்செல்ல குறித்தனுப்பப்படுபவர்களுக்கு கிடைக்கக்கூடிய அதே பயன்களைப்பெற உரிமையுடையவர்கள் என்பதை நாங்கள் வலியுறுத்திக் கூறுகிறோம். உண்மையில், மனுதாரர், அத்தகைய பயனை வழங்குவதை ஏன் அவ்வாறு தீவிரமாக எதிர்க்கவேண்டும் என்று நாங்கள் திகைப்படைகிறோம். பதிவாளர் அலுவலகம்/மாநில அரசு குறுகிய காலத்தில் நீதிமன்றக் கட்டணத்தை ஒருமுறைதான் இழக்கும் என்றாலும் நீண்டகாலமாக முடிவற்ற சுழற்சியிலுள்ள வழக்குகளை நடத்துவதில் அவர்களுக்கு ஏற்படும் செலவினத்தையும், செலவு வாய்ப்பினையும் மிச்சப்படுத்துகிறது. ஆகவே, அவர்களது சுய அக்கறையின்பேரில் 1-ஆம் எதிர்மனுதாரரின் கோரிக்கையை அனுமதித்திருக்கவேண்டும்.

21. இவ்வாறாக, எங்களது கருத்துப்படி, உ.வி.மு.ச., பிரிவு 89 மற்றும் 1955-ஆம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 69-அ ஆகியவை தாராளப்போக்குடன் பொருள்கொள்ளப்படவேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்மானித்தது சரியேயாகும். இவ்விரிவான செயல்நோக்குடைய பொருள்விளக்கத்தைக் கருத்திற்கொண்டு, நாங்கள் உயர் நீதிமன்றத்தின் முடிவினை உறுதிசெய்து, உ.வி.மு.ச., பிரிவு 89-ஐ

உள்ளடக்குவதோடு, நீதிமன்றம் பின்னிட்டு, தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சினையை நீதிமன்றத்திற்கு வெளியே தீர்த்துக்கொள்ளும் அனைத்து முறைகளிலும் சட்டப்படியாக முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அறியவருமிடத்து, அவற்றுக்கும் *1955*-ஆம் ஆண்டு சட்டப்பிரிவு *69*-அ-இன் பயனை விரிவுபடுத்தவேண்டும் என தீர்மானிக்கிறோம். ஆதலால், இது தற்போதைய கருத்துவேறுபாட்டை உள்ளடக்குகிறது. இதில் தனிப்பட்ட முறையில் தீர்வு எட்டப்பெற்று, உயர் நீதிமன்றத்தின் முன்பு மேல்முறையீட்டைத் திரும்பப்பெறுவதற்கான கோரிக்கைமனு தாக்கல் செய்யப்பட்ட இத்தகைய ஒரு நேர்விலுங்கூட, மேல்முறையீட்டாளரான இதிலுள்ள *1*-ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் நீதிமன்றக் கட்டணத்தைத் திரும்பப்பெறுவதற்குரியவராவார்.

<u>தீர்முடிவுகளும் உத்தரவுகளும்</u>

22. அதன்படி இம்மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன மற்றும் *08.01.2020*-ஆம் தேதியிடப்பட்ட உயர் நீதிமன்றத்தின் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை உறுதிசெய்யப்படுகிறது.

23. மேல்முறையீடு வழக்கு எண்கள் *876/2012* மற்றும் *566/2013*-இல் *1*-ஆம் எதிர்மனுதாரரால் வைப்பீடு செய்யப்பட்ட நீதிமன்றக் கட்டணத்தை ஆறு வார காலத்திற்குள் திருப்பியளிக்கும்படி மனுதாரர்களுக்கு உத்தரவிடப்படுகின்றது.

மாண்புமிகு நீதியரசர் திரு. மோகன் எம். சந்தானகவுடர்

மாண்புமிகு நீதியரசர் திரு. வினீத் சரண்

புது தில்லி,

17.02.2021.

.....

உரிமைத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."